419

ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

कियन्तं कालं वा दुरितचयदुस्सत्वनिलये
भवाख्येऽरण्येऽन्तर्विदयमखिलेश भ्रमयसि ।
वृधा मां दुःखाब्धिं नयसि यदि चानन्यशरणं
प्रथा सा त्याज्या स्यात् परिशिव कृपाराशिरिति या ॥ १७ ॥

கியந்தம் காலம் வா து³ரிதசயது³ஸ்ஸத்வநிலயே
ப⁴வாக்²யேऽரண்யேऽந்தர்வித³யமகி²லேஶ ப்⁴ரமயஸி ।
வ்ருதா⁴ மாம் து³:கா²ப்³தி⁴ம் நயஸி யதி³ சாநந்யஶரணம்
ப்ரதா² ஸா த்யாஜ்யா ஸ்யாத் பரிஶிவ க்ருபாராஶிரிதி யா ॥

ஹே அகிலேச! ஸகலப் பிராணிகளுக்கும் அதிபதியாய் விளங்கும் ஸ்ரீ சந்திரசேகர! பலவிதமான பாபங்களாகிற கெட்ட பிராணிகளுக்கு இருப்பிடமான ஸம்ஸாரமென்கிற அரண்யத்தின் மத்தியில் எவ்வளவு காலம்வரையில் அற்பம்கூட தயவு இல்லாமல் என்னைச் சுற்றிவைப்பாய்; உம்மைத்தவிர்த்து வேறுகதியற்றுநிற்கும் என்னைப் பயனில்லாமல் வீணில் துக்கமென்கிற கடலில் அமிழ்த்தினீரேயாகில் இயற்கையாகக் கருணாநிதி என்று உமக்கு ப்ரஸித்தமாய் எற்பட்டிருக்கும் பெயரை விடும்படி நேரும்.

ஹே பரமேச்வர! மிகவும் கொடிய கஷ்டங்களுக்கிருப்பிடமான பெரியபவமென்னும் கானகத்தில் எவ்வளவுகாலம்வரையில் என்னைச் சுழலும்படி செய்கிறதாக உத்தேசம். அனுவச்யமாய் இந்த ஸம்ஸாரத்தில் தள்ளித் தங்களையே சரணாகதியாகவடைந்த என்னைக் கஷ்டப்படுத்தினால் கருணைக்கடல் என்று உமக்கு எற்பட்டிருக்கும்அனாதியாய் விளங்கும்பிரஸித்தியை விடும்படி நேரும் உமது கௌரவத்திற்கு அது அழகல்ல. ஆகையால் என்னைக் கைவிடாமல் அவச்யம் பாதுகாக்கவேண்டும். சுபம்!

உபபத்திராதிபர்

420

ஆர்ய தர்மம்.
விபவ-ஹூ ஆவணி-மீ உ௨

வேதாந்தஸாரஸங்கிரஹம்.

(386-வது பக்கத்தொடர்ச்சி.)

இனி ஸ்தூலஸ்ருஷ்டியை நிரூபிக்கிறோம்.

தமோகுணப் பிரதானங்களாயும், அபஞ்சீகிருதங்களாயுமிருக்கும் ஆகாயம் முதலான பஞ்சபூதங்களையும் ஒவ்வொன்றையும் இரண்டாகப்பிரித்து அவைகளில் ஒவ்வொரு பூதங்களுடைய பாதிபாகத்தை நான்கு பாகமாகச் செய்துகொண்டு தன்னுடையதான பாதிபாகத்தை விலக்கிவிட்டு பாக்கியிருக்கும் நான்கு பூதங்களிலும் ஒவ்வொரு பாகமாகச்சேர்த்துவிடவேண்டும். இவ்விதம் சேர்த்தால் ஒவ்வொரு பூதத்திற்கும் தன்னுடைய பாகம்பாதியும் இதர நான்கு பூதங்களுடைய நான்கு அம்சமும் சேர்ந்து அரைபாகமும் ஒன்றுசேர்ந்தால் முழுபாகமாகின்றது. இவ்விதம் பிரித்துச் சேர்த்தால் ஐந்துபூதங்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து பூதங்களுடைய ஸம்பந்தமும் ஏற்படுகின்றது. இதைத்தான் பஞ்சீகிருதபூதங்களென்று வியவகாரஞ்செய்கிறார்கள்.

இவ்விதம் பஞ்சீகிருதங்களான இந்தப் பஞ்சபூதங்களிலிருந்தும் பிரும்மாண்டம் அதற்குள் பதினான்குலோகங்கள் நான்கு விதங்களான ஸ்தூலசரீரங்களும் அன்னம் முதலான போக்யவஸ்துக்களும் உண்டாயிருக்கின்றன. இந்தஸ் தூலசரீரங்களில்ஜீவேச்வரர்களின் இருப்பு ஜாக்ரதவஸ்தையாகும், இந்த ஸ்தூலசரீரம்தான் அன்னமயகோசம். இவ்விதம் ஸ்தூலசரீரசிருஷ்டி ஏற்படுகின்றது.

இங்கு கூறப்பட்ட ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம் என்கிற இம் மூன்றுசரீரங்களும் ஒவ்வொன்றும் வியஷ்டி என்றும், ஸமஷ்டி என்றும் பேதத்தால் இருவகையாகும். வனம், கிராமம் என்று மரங்களின் கூட்டங்களையும், வீடுகளின் ஸமுதாயங்களையும் ஒன்றாகக் கூறுவதற்கு ஸமஷ்டி என்று பெயர். ஸமஷ்டி

என்று கூறப்படும் வனம், கிராமம் முதலானவைகளின் அவசிய மான அம்சம் மரம், கிருஹம் முதலியவைகள் வியஷ்டியாகும். இவ்விதமே ஸகல சரீரமும் சேர்ந்த ஸமுதாயம் ஸமஷ்டியாகும். ஒரு சரீரம் வியஷ்டியாகும், இந்த இரண்டிற்குள் ஸமஷ்டிசரீ ரத்தை உபாதியாகக்கொண்டவர் ஈசுவரன். வியஷ்டியை உபாதி யாகக்கொண்டவன் ஜீவன். அதிலும் காரணஸமஷ்டியால் ஈசுவர னென்றும் காரணவியஷ்டியால் பிராக்ஞன், ஸூக்ஷ்மஸமஷ்டியால் ஹிரண்யகர்ப்பன், ஸூக்ஷ்மவியஷ்டியால் தைஜஸன், ஸ்தூல ஸமஷ்டியால் வைச்வாநரன், ஸ்தூலவியஷ்டியால் விச்வன், இவை தான் ஜீவேச்வரர்களுக்குள்ள அவாந்திரபேதங்கள்.

இந்த ஈசுவரன்தான் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற இம் மூன்றுகுணங்களுடையஉபாதிகளால்முறையேபிரும்மா, விஷ்ணு, ருத்திரர் என்கிற ரூபத்தைத் தரித்து சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார மென்கிற கர்மாக்களைச் செய்கிறான். பிரும்மா விராட்ரூபத்திலும், விஷ்ணு ஹிரண்யகர்ப்பரிடத்திலும், ருத்திரர் ஈசுவரனிடத்திலும் அடங்கியவர்கள் இவ்விதம் பிரபஞ்சத்தின் உற்பத்தியாகும். இது தான் அத்தியாரோபமெனப்படும். இந்த அத்தியாரோபமானது விக்ஷேபசக்தியினுடைய காரியம்.

இனி ஆவரணசக்தியின்காரியம் கூறப்படுகின்றது.

ஈச்வரன், ஆத்மக்ஞானி இவர்களைவிட்டு பாக்கியுள்ள ஸகல ஜீவர்களுக்கும் பஞ்சகோசங்களுக்கும் ஆன்மஸ்வரூபத்திற்கும்பே தத்தை ஆவரணசக்தியானது இருள்போல் மறைத்துக்காட்டுகின் றது. ஆவரணமென்பது இருவகையாகும், அஸத்வாவரணம் 1 அபா ஞவரணம் 2. உண்மையில் விளங்கும்வஸ்துவை இல்லை யென்று செ ய்யும் வியவகாரத்திற்குக் காரணமாயிருப்பது அஸத்வாவரணம். உண்மையாகவுள்ள ஒருவஸ்துவை எமக்குத் தெரியவில்லை என்று செய்யப்படும் வியவகாரத்திற்குக் காரணமாயிருப்பது அபான வரணம். இந்த ஆவரணசக்தியின் காரியம்தான் ஸம்ஸாரவிருக்ஷத் திற்கு மூலமாகின்றது. விக்ஷேபசக்திகாரியமல்ல.

இந்த இரண்டுவிதமான ஆவரணமும் தத்வக்ஞானத்தால் நாசத்தையடையத்தகுந்தது. தத்வக்ஞானமும் பரோக்ஷஞானம் அபரோக்ஷக்ஞானமென்று இருவகையாகும். அவ்விரண்டில் குரு முகமாக வேதாந்தசாஸ்திரங்களாலேற்படும் ஞானம் பரோக்ஷக் ஞானமாகும். இதுதான் சிரவணமென்று சொல்லப்படுகிறது.

இவ்வித சிரவணம் ஆசார்யமுகமாக திருடதரமாக ஏற்பட்டால் அப்பொழுது வஸ்து இல்லை என்கிற அஸத்வாவரணரூபமான ஆவரணசக்தியானது நாசத்தையடைகின்றது. அதாவது ஒரு வஸ்து இருக்கிறதென்று வியவகரிக்கின்றான். சிரவணத்தினால் ஸம்சயத்தையும் மனனத்தினால் அஸம்பாவனையையும் நிதித்யாஸனத்தினால் விபரீதபாவனையையும் அடியோடு போக்கடித்து, அக்ஞானவஸ்தையில் தேகத்தில் ஆத்மபுத்தி எப்படி திருடமாயிருக்குமோ, அவ்விதம் பிர்மஸ்வரூபத்தில் திருடமாய் ஏற்படும் ஆத்மஞானம் அபரோக்ஷக்ஞானமாகும். இந்த க்ஞானத்தால் வஸ்து பிரகாசிக்கவில்லை என்கிற வியவகாரத்திற்குக் காரணமாயிருந்த அபானுவரணம் என்கிற ஆவரணசக்தி நாசத்தையடைகின்றது. இவ்விதமேற்படும் பரோக்ஷக்ஞானத்தாலும் அபரோக்ஷக்ஞானத்தாலும் பிரும்மவஸ்து இல்லை, பிரகாசிக்கவில்லை என்கிற வியவகாரங்களுக்குக் காரணமான ஆவரணவிருத்திஸ்வரூபம் இரண்டும் நாசத்தையடைகின்றது. அது நாசத்தையடைந்தால் அப்பொழுது ஸகலாநர்த்தநிவிருத்தியும் ஆனந்தப்பிராப்தியும்உண்டாகின்றது. அவ்விதம் உண்டாவதைத்தான்.

अज्ञानमावृतिस्तद्वद्विक्षेपश्च परोक्षधीः ।
अपरोक्षमतिरशोकहातिस्तृप्तिर्निरंकुशा ॥

𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌵𑍃𑌤𑌿𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑌶𑍍𑌚 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌧𑍀𑌃 ।
𑌅𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌮𑌤𑌿𑌰𑌶𑍋𑌕𑌹𑌾𑌤𑌿𑌸𑍍𑌤𑍃𑌪𑍍𑌤𑌿𑌰𑍍𑌨𑌿𑌰𑌂𑌕𑍁𑌶𑌾 ।

இந்த சுலோகத்தாலும் ஏழு அவஸ்தைகள் ஸித்திக்கின்றனவென்று ஒரு பெரியார் கூறியுள்ளார்.

இவ்விதம் ஆகாயத்தைப்போல் ஸ்வச்சமாய் விளங்கும் சைதன்யவஸ்துவில் இருப்பதாகத் தோன்றுகிறதாயும் உண்மையில் இல்லாததான இந்தப் பிரபஞ்சத்தைக் கற்பிப்பதுதான் அத்யாரோபமாகும்.

காரணத்தைவிட்டு வேறான கார்யம் இல்லை என்கிற திருடமான அறிவால் கிளிஞ்சலில் வெள்ளிபோலவும், கயிற்றில் பாம்புபோலவும், பிரும்மத்தினிடத்திலும் இப்பிரபஞ்சம் இல்லை என்கிற நிஷேதக்ஞானமே அபவாதமாகும். யா=எதானது மா=இல்லையோ, அதற்கு மாயை என்று பெயர், என்று மாயாபதத்திற்

கும் இவ்விதமே அவித்யை என்கிற பதத்திற்கும் வியுத்பத்தி ஏற்படுகிறபடியால் மாயா, அவித்யா, பதங்களின் பொருள்கள் கற்பிதமென்று ஸித்திக்கின்றது.

இவ்விதம் எவன்பிரும்மவஸ்துவைத்தவிர்த்து வேறு வஸ்து கிடையாதென்றும், அந்தப் பிரும்மமும் நான்தான்என்றும், குருமுகமாக நன்கு விசாரித்து அறிகிறானோ அவன்தான் ஜீவன் முக்தன், என்று வேதாந்தசாஸ்திரங்களுடைய ஸித்தாந்தமான பொருள். சுபம்! (தொடரும்)

(முதல் வர்ணகம் முடிவுபெற்றது.)

உபபத்திராதிபர்

ஷண்முகன் துணை.

விநாயக சதுர்த்தி.

ஐங்கரனை யாறுகலை யானவனை யன்றுதிங்கள்
போங்குதுயர் போக்கும் புனிதனை—செங்கமல
மாதநினைந் தேத்திப் பணிகுவார் தம்பெருமை
யோதவெளி தாமோ வுரை.

விநாயகர் திருவவதாரம்.

ஆதியில் மாகதனென்னும் முனிவரொருவரிருந்தார். அவர் மனைவி விபுதையென்ற ஓர் ராக்ஷதஸ்திரீ, இவர்களுக்கு கெயமுகன் என்ற ஓர் அஸுரன் பிறந்தான். இவன் பரமசிவனைக் குறித்து மிக்வும் மேன்மையானதோர் தவஞ்செய்தான். பகவான் அவன் தபஸுக்கு மகிழ்ந்து அவன் சொல்படி தேவர்களெல்லோரும் கேட்கவும் யாவராலும் எவ்வித ஆயுதத்தாலும் வெல்லாதிருக்கவும் வரத்தைக் கொடுத்தருளினர்.

அவன் அவ்வரங்களையடைந்த கெர்வத்தினால் விண்ணவரையும் மண்ணவரையும் மிகவும் ஹிம்ஸித்துவந்தான். அக்கயமுகாஸுரனுடைய ஹிம்ஸையைப் பொறுக்கமுடியாத தேவர்களனைவரும் சிவபிரானிடஞ்சென்று முறையிட்டனர். உமாகாந்தன் தேவர்களுக்கபயமளித்து அன்னவர்களை இருப்பிடத்திற்குஅனுப்பினர்.

பின்பு பரமசிவன் பார்வதியுடன் கைலாஸத்திற்கருகிலுள்ள உத்தியானவனத்தின் மத்தியிலிருக்கும் ஓர் சித்திரமண்டபத்தை யடைந்தார். அம்மண்டபத்திலெழுதியிருக்கும் சித்திரங்களைப் பார்த்துக்கொண்டுவருகையில் அதில் (சிவசக்திப்பிரணவங்கள்) இரண்டு யானைரூபமாய்த் தம் தம் துதிக்கையால் புணர்தல்போல் எழுதப்பட்டிருந்ததை உமாதேவி கண்டு ஸந்தோஷங்கொண்டு ஈசரிடம் சொல்ல அவருமதை நோக்கினர். உடனே அச்சித்திரத்திலிருந்து யானைமுகத்துடன் ஸ்ரீ மஹாகணபதி திருவவதாரமானர்.

சிவபெருமான், அவருக்கு விநாயகர் என்னும் நாமம் சூட்டி பாசம், அங்குசம் முதலிய ஆயுதங்களைக் கொடுத்து அவரை பூதகணங்களுக்குத் தலைவராக்கினர்.

இவைகளைப் பெற்றுக்கொண்டு விநாயகபெருமான் கயமுகாஸுரனேடு கோரமான யுத்தம்செய்து அவனை ஜெயிக்கமுடியாதது கண்டு தன் வலதுபக்கத்துத் தந்தத்தை ஒடித்துக்கொண்டு அக்கயமுகாஸுரன்மேல் விட்டார். உடனே அவன் பெரிச்சாளி ரூபமாகமாறி, இவரிடம் சண்டைக்குவந்தான். அதைக்கண்ட விநாயகர் அதைத் தன் வாகனமாக்கிக்கொண்டார். தேவர்களின் துயரை நீக்கியருளினர்.

விநாயக சதுர்த்தி நிர்ணயம்.

சந்திரன் சாபம்:— முன்னொருகாலத்தில் வெள்ளிமலையென்று சொல்லப்பெறும் கைலயங்கிரியிலே ஸகல தேவர்களும், பூதகணங்களும் சூழ்ந்திருக்க நவமணிகளாலிழைக்கப்பெற்ற ஓர் திவ்யமான சிங்காஸனத்தின் மீது விநாயகமூர்த்தியோடும், பாலசுப்பிரமணியக்கடவுளோடும், அண்டநாயகராகிய சிவபெருமான் பார்வதீஸமேதராய் ஸர்வாலங்காரபூஷிதராய்கொலுவீற்றிருந்தார். நந்திதேவர் தன் கைப்பிரம்பினல் ஸந்நிதியை விலக்கி எல்லோரும் எளிதில் தரிசித்துப் பகவானுடைய அனுக்கிரஹத்தைப் பெறும்படி செய்துவந்தார்.

அந்த ஸமயத்தில் த்ரிலோகங்களிலும் சென்றுவரக்கூடிய நாரதபகவான் அங்குவந்தார். அவர் தான் கொண்டுவந்த கனியைப் பகவான் திருவடிகளில் வைத்து நமஸ்காரம் செய்தார். தன்னுடைய வீணையை வாசிக்க ஆரம்பித்தார். நாரதருடைய

வீணையின் நாதத்தைக்கேட்ட பரமசிவன் பரமானந்தமடைந்து முனிவருக்கு அநுக்ரஹஞ்செய்தார்.

உடனே அவர் கொண்டுவந்த கனியை பகவான் எடுத்து எதிரிலிருந்த ப்ரும்மாவைப் பார்த்து பிரமனே இக்கனியை என்னருகிலுள்ள விநாயகர், சுப்பிரமண்யர் இவர்களிருவரில் யாருக்குக் கொடுக்கலாமென்று கேட்டார்.

அதற்குப் பிரமன்முருகக்கடவுள் இளையவராதலால் அவருக்கே கனியைக் கொடுக்கலாமென்று சொன்னார். அவ்வாறே சிவபெருமான் கனியை சுப்பிரமணியருக்குக் கொடுத்துவிட்டார்.

இதையறிந்த விநாயகமூர்த்தி கோபங்கொண்டு கண்களிலிருந்து தீப்பொறி சிதறும்படியாகப் பிரமனை நோக்கினார். இதைப்பார்த்த பிரும்மா நடுநடுங்கி உடல்பதைத்து இன்னது செய்வதென்று தெரியாமல் தன் கணங்களுடன் விநாயகமூர்த்தியிடம் சென்று ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துப் பலமுறை வேத மந்திரங்களால் துதித்தார். அறியாதுசெய்த குற்றத்தை மன்னித்தருளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். உடனே கணேசமூர்த்தி மனமிரங்கிபிர்ம்மாவிற்குக்கிருபைசெய்தார். அச்சமயம் ஆகாய வீதியில் பிரகாசித்துக்கொண்டிருந்தசந்திரன் இங்கு நடந்ததைக்கண்டு நகைத்தான். விநாயகப்பெருமான் இதையறிந்து மிகக் கோபங்கொண்டு, "சந்திரனே! பெரியோர்களிருக்கும் இச்சபையினிடம் கொஞ்சமேனும் அடக்கமில்லாமல் பல்லைக்காட்டி நகைத்தாயல்லவா? என்னை இன்னாரென்று அறியாய்போலும், இனி நீ உலகத்தில் பிரகாசமின்றி மறைந்துபோகக்கடவாய் உன் உருவத்தைக்கண்டவர்கள் பெருந்துன்பக்கடலில் மூழ்குவாரென்று சபித்தனர். உடனே சந்திரனுக்கு ஒளி போய்விட்டது. சந்திரன் மிகவும் வருத்தத்துடன் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தான்.

தேவர்களின் வேண்டுகோள்:— சந்திரனொளியில்லாமற் போகவே தேவர்களுக்கு அமிர்தம் கிடைக்கவில்லை. மானிடர்களுக்குப் பயிர், பச்சைகள் பயன்தரவில்லை. ஆதலால் தேவர்கள் இந்திரனிடம் முறையிட்டனர். இந்திரன் மற்றைய தேவர்களுடன் சென்று விநாயகர் திருவடிகளில் நமஸ்காரம் செய்து விண்ணுலகும் மண்ணுலகும் சந்தோஷிக்கச் சிறியோனாகிய சந்திரன்

செய்த பிழையைப் பெரியோராகிய தாங்கள் பொறுத்தருள வேண்டுமென்று வேண்டி நின்றான். இந்திராதி தேவர்களின் வேண்டுகோளுக்கிரங்கி கிருபைகூர்ந்து சந்திரனுக்கு ஒளியைத் தந்தனர். ஆனால் தன்னுடைய திருஅவதாரதினமாகிய ஆவணிமீ பூர்வபக்ஷம் சதுர்த்தியன்றையதினமட்டும் அவனை யாவரும் பார்க்கலாகாதென்றும், மறந்தேனும் பார்த்தவர்களுக்கபவாத தோஷமுண்டென்று சொன்னார்,

இதைக் கேட்ட தேவர்கள் மிகவும் சந்தோஷங்கொண்டு சந்திரனிடம் நடந்ததைச் சொன்னார்கள். அவனை விநாயகருடைய ஏகாக்ஷர மந்திரத்தை உச்சரித்து அவரை பூஜிக்கும்படிச் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

சந்திரன் வரம்பெறுதல்:— தேவர்கள் சொல்லியபடியே சந்திரன் விநாயகமூர்த்தியைக் கிரமப்படி பூஜித்து அவருடைய (பிரணவம் என்ற ஏகாக்ஷரமந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தான். அதைக் கண்ட விநாயகமூர்த்தி சந்திரனுடைய அன்புக்கு மனமிரங்கி அவனெதிரில் வந்து நின்றார். சந்திரன் உடனே அவர் திருவடிகளில் நமஸ்கரித்தெழுந்து கைகட்டி, வாய்பொத்தி சுவாமி! 'அறிவிலியாகிய அடியேன் அறியாமற் செய்த பிழையை முழுதும்பொறுத்து என்னை ரக்ஷிக்கவேண்டும்' என்றுவேண்டிக்கொண்டான். அதற்கு விநாயக்கக்கடவுள் கிருபைகூர்ந்து சந்திரனுக்கு ஓர் வரம் அளித்தார். அதாவது சங்கடங்களை நீக்கிக்கொள்ள வேண்டினோர் மேற்சொல்லிய சதுர்த்தியன்றைய தினம் கிரமப்படி என்னைப் பூஜித்து மாலையில் நீ உதயமாகும்போது உன்னையுமர்ச்சித்துத் துதிக்கடவர் என்றார். இதற்கு திருஷ்டாந்தமாய்ச் சந்திரனிடமிருந்த ஓர் கலையைத் தன்முடிமீதமைத்துக் கொண்டார்.

அதுமுதல் தேவர், முனிவர், முதலானோர் விநாயகமூர்த்தியைப் பிரதி வருஷமும் † ஆவணிமீ சுக்கிலபக்ஷம் (பூர்வபக்ஷம்) சதுர்த்தியன்றயதினம் காலையில் விதிப்படி விநாயகமூர்த்தியைப் பூஜித்து மாலையில் சந்திரனை அர்ச்சித்து சகல ஸித்திகளும் அடைந்து வந்தார்கள் என்று பிர்மதேவன் பிருர் தேவனுக்குச்சொன்ன

† இவ்வருஷம் அதிகமாஸத்தால் புரட்டாசிமீ த்தில் வருகிறது. இவ்விதம் எந்த வருஷங்களில் அதிகமாசம் வருகின்றதோ அந்த ஸமயம் ஆவணி என்கிற நியமமில்லாமல் மாறுவதுமுண்டு.

தாகத் தேவேந்திரன் சூரசேன மகாராஜனுக்குச்சொன்னுரென்று பார்க்கவ புராணம் என்கிற விநாயக புராணத்திற் சொல்லப் பட்டிருக்கிறது.

இடையில் சதுர்த்தியன்று சந்திரனைப்பார்த்ததால் நேரிட்ட அபவாதம்.

துவாரகையில் கிருஷ்ணபகவான் ஆவணிமீ சுக்கில பக்ஷம் சதுர்த்தியன்று சந்திரனைப்பார்த்து விட்டார். அருகிலிருந்தநாரதர் அன்று சந்திரனைப் பார்க்கலாகாதென்றும் பார்ப்பவருக்கு அப வாததோஷம் நேரிடுமென்றும் உரைத்தார். அப்போது அவ் வாக்கியத்தைக் கிருஷ்ணபகவான் மதிக்கவில்லை.

சிலநாள் கழிந்தது. சந்திராதித்தன் என்பவன் சூரியனிட மிருந்து பெற்ற ஸ்யமந்தகமணியைத் தனக்குக் கொடுக்கும்படி கிருஷ்ணபகவான் அவனை வேண்டினர். அவன் அதற்கு யா தொரு மருமொழியுங் கொடாது சென்றனன்.

ஒருநாள் சந்திராதித்தன் தம்பி பிரசேனன் என்பவன் அம் மணியை அணிந்துகொண்டு வேட்டையாடச் சென்ருன். ஒரு சிங்கம் அவனோடு சண்டை செய்து அம்மணியைக் கவர்ந்து சென்றது. இதைப் பார்த்த ஜாம்புவான் என்னும் காடி சிங்கத்து டன் சண்டை செய்து, அம்மணியைப் பிடுங்கிக் கொண்டுபோய் தன் புத்திரி ஜாம்பவதி தொட்டிலுக்கு அலங்காரமாக மேலே கட்டி வைத்தது.

இது இப்படியிருக்க கிருஷ்ணபகவான் தந்திரமாய்ப் பிரசே னனை மோசம் செய்து கொன்று மணியைக் கவர்ந்து கொண்டார் என்ற பெரிய அபவாதம் உலகெங்கும் பரவியது. அப்பொழுது தான் நாரதருடைய வாக்குக் கிருஷ்ணபகவானுக்கு ஞாபகம் வந் தது. உடனே ஸ்ரீ கிருஷ்ணபகவான் இது தீரும் விதம் விநாயக பூஜையே என்றறிந்து விதிப்படி விநாயக பூஜையை முடித்தார். பிறகு பிரசேனன் வேட்டைக்குப்போன வழியே சென்ருர். சிங் கம், காடி இவைகளின் சண்டைகளை அதனதன் அடிச்சுவடுகளா லேயே அறிந்தார். கடைசியாய் ஜாம்பவான் குகையிற் சென்று 21-நாள் போர் புரிந்தார். போரின் மத்தியில் தான் விஷ்ணுவின் அவதாரமென்பதை அவனுக்கு நிதரிசனமாகக் காட்டி அவனுல் பூஜிக்கப் பெற்று அவனுடைய புத்திரியாகிய ஜாம்பவதியை மண ந்து சீதனமாக முற்கூறிய ஸ்யமந்தகமணியைக் கொடுக்க அதை யும் பெற்றுக்கொண்டு துவாரகைக்கு மீண்டனர். இதையறிந்த யாவரும் இவர்மேல் கொண்டிருந்த சந்தேகத்தை ஒழித்தனர்

ஆகையால் நாம் எக்காலத்திலும் விநாயகக் கடவுளை இகழவே கூடாது என்று பத்திர புஷ்பங்களினால் பூஜிக்கவேண்டுமென்றும், பிரதிதினமும் பூஜிக்காவிட்டாலும் ஆவணிமீ சுக்கிலபக்ஷம் சதுர்த்தியிலாவது பூஜித்து, மாலையில் சந்திரனை விதிப்படி தெரிசனஞ்செய்ய வேண்டுமென்றும் அதனால் சகல ஐசுவர்யமும் கீர்த்தியும், புத்திர சந்தானமும், அடையலாமென்றுசொல்லப்படுகிறது

அறுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

தேமன்னுங் கொன்றைபுனை செஞ்சடையோன் முன்னீன்றதேவை யென்னும்
பூமன்னு மிருவரையேன் புயத்திடத்தும் நாவிடத்தும் பொலிய வைக்கும்
காமன்னு மைங்கரத்துக் கணபதியைக் கைத்தொழுதால் களங்கம் நீங்கி
தூமன்று மனமடைவார் சுகமடைவார் மகவடைவார் துணிவுதானே

சுபம்! K. நாராயணசாமி அய்யர்,
முனிசுபல் ஹைஸ்கூல் உபாத்தியாயர் விழுப்புரம்.

ஸ்நாநபேதங்கள்.

(394-வது பக்கத்தொடர்ச்சி)

சனிக்கு असिततिलाञ्जनलोध्रबलाभिः शतकुसुमान्वितलाजशमीभिः ।
रवितनये कथितं विषमस्थे दुरितहृदा प्लवनं मुनिमुख्यैः ॥

அஸிததிலாஞ்ஜநலோத்ரபலாபி: ஶதகுஸுமாந்விதலாஜ ஶமீபி: । ரவிதநயே கதிதம் விஷமஸ்தே துரிதஹ்ருதா ப்லவநம் முநிமுக்யை: ।

காரெள்ளு, அஞ்சனக்கல், லோத்திரம், சித்தாமுட்டிவேர், சதகுப்பை, நெல்பொரி, வன்னி இலை இவை சனித்ரவ்யம்.

ராகுவுக்கு लोध्रगर्भतिलपत्रकमुस्ताहस्तिदानमृगनाभिपयोभिः ।
स्नानमार्तिमिह कुन्ततिराहोः साजमूत्रमिदमेव च केतोः ॥

லோத்ரகர்பதிலபத்ரகமுஸ்தாஹஸ்திதாநம்ருகநாபிபயோபி: । ஸ்நாநமார்திமிஹ குந்ததிராஹோ: ஸாஜமூத்ரமிதமேவ ச கேதோ: ॥

லோத்திரம், எள்ளிலை, கோரைக் கிழங்கு யானைமதம் கஸ்தூரி, வெட்டிவேர் இவை ராகுவுக்கு திரவ்யங்கள்.

கேதுவுக்கு ராகு திரவ்யத்துடன் ஆட்டு மூத்திரம் சேர்க்க வேண்டியது.

இவைகள் ரிஷிகளால் சொல்லப்பட்டவைகள் ஆனதால் இந்தப்படி செய்தால் ஸகல கிரஹதோஷங்களும் நீங்கி, ஆரோக்ய முண்டாகும். அவனவன் ஜனித்த வாரம், நக்ஷத்திரம், அந்தந்த கிரஹசஞ்சார காலம் இவைகளில் செய்யவேண்டும். அந்தந்த கிரஹங்கள் பிரீதியடைவார்கள். இரண்டு மூன்று கிரகங்களின் தோஷமிருந்தால் எல்லாவற்றிற்கும் ஒன்ருய் சேர்க்கக் கூடாது, தனித்தனி நாளில் செய்யவேணும்.

लाजाकुष्टबला प्रियंगुघनसिद्धार्थैः निशा दारुभिः
पुंखालोध्रयुतैः जलैः निगदितं स्नानं ग्रहोत्थाघनुत् ।

லாஜாகுஷ்டபலாப்ரியங்குகநஸித்தார்த்தை: நிசாதா ருபி: பும்க்காலோத்ரயுதை: ஜலை: நிகதிதம் ஸ்நாநம் க்ரஹோத்தாகநுத் ।

20. ஒஷதிஸ்ஞனம். ரத்னமாலையில் உள்ளது.
நெல்பொரி, கோஷ்டம், சித்தாமுட்டி, தினை, கோரைக்கிழங்கு, வெண்கடுகு, மஞ்சள், தேவதாருக்கட்டை, இவைகள் ஸாமான்ய மாய் எப்போதும் எல்லாரும் ஸ்ஞனத்தில்உபயோகப்படுத்தலாம். இது ஒஷதிஸ்ஞனமென்று பெயர். பொது பிரயோகம்.

21. தேகாரோக்யமுண்டாவதற்காக நல்ல தைலங்கள்மருந்துகள் இவைகளை உபயோகித்து வருவது ஆரோக்கியஸ்ஞனம.

22. காலை, மத்தியான்னம், சாயங்காலம்,முக்காலம்நீருடுவது திரிஷவணஸ்ஞனம்.

23. யாகம் விருதம், முதலியவை முடித்துக் கடைசியில் செய்வது அவபிருதஸ்ஞனம்.

24. கடுங்கோடையில் மேகசஞ்சாரமில்லாதபகலில் தன்சரீரத்தை இலைகளாலும்அல்லதுதுணியாலும் மூடி வெய்யிலில்படுப்பது வியர்வை உண்டாகும் ரோகங்கள் நீங்கும். ஆதபஸ்ஞனம்.

25. स्नानं मनोमलत्यागं ஸ்நாநம் மநோமலத்யாகம் தியானத்தால் தன் மனதிலுள்ள தோஷங்களை நீக்கி, சுத்தனுயிருப்பது, மானஸீகஸ்நானம்.

26. வஸ்திரத்துடன்நீராடுவதுஸசேலஸ்ஞனமென்றும் மாகஸ்ஞனம்கிருத்திகாஸ்ஞனம்முதலிய அனேகபேதங்கள்இருக்கின்றன.

பிரும்ம, க்ஷத்திரிய, வைசியர்கள், ஸ்ஞ்னத்திற்குறிய மந்திரங்களைச் சொல்லியும், ஸ்திரீ சூத்திரர்கள் மந்திரம் சொல்லாமலே ஸ்நானம்செய்ய வேண்டுமென்றும்கண்ணபிரான் தர்மபுத்திருக்கு அருளிச்சொன்னுர்.

பனையப்பட்டிவெங்கடேசய்யா.

430

பிழை திருத்தம்.

நாளது ஆவணி மீ 1உ வெளிவந்த ஆர்யதர்மம் பத்திரிகையின் 364-வது பக்கத்தில் 'ஸ்ரீராமாநுஜாசாரியார் கி. பி. 1017-ல் அவதரித்தார்' என்று தொடங்கி இவர்கள் ஸ்மிருதிகளில் சொல்லிய ஆசாரங்களை உறுதியுடன் அநுஷ்டிப்பவர்கள் என்பதுமுடிய நீக்கி, அதற்குப்பதிலாக அடியிற் கண்ட விஷயத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

"ஸ்ரீ ராமனுஜாசாரியார் கி, பி. 1017-ல் அவதரித்தார். வேதாந்தாசார்யார் என்ற ஸ்ரீ வேதாந்த தேசிகர் கி. பி. 1270-ல் அதாவது ஸ்ரீராமாநுஜர் அவதரித்த 253-வருஷங்களுக்குப் பிறகு அவதரித்தார். இவர் ஸ்ரீ ராமானுஜரைப் பின்பற்றிய விசிஷ்டாத்வைதிகளை (Reformed) சீர்திருத்தினார். அதாவது புராதன ஸ்மார்த்தாசாரத்துக்கு திருப்பினா. ஸ்ரீ வேதாந்த தேசிகரைப் போலல்லாது தற்காலத்தில் இந்திய சமூஹ சீர்திருத்தக் காரர்கள் (Indian Social Reformers) என்று போலிப்பெயரைத் தாங்கி நமது புராதன வைதிக மதத்தையும், ஆசாரானுஷ்டானங்களையும் கெடுக்க முயன்று வரும் கோடரிக் காம்புகளை இந்திய சமூஹசீர்கேடர்கள் (Indiu Sccial Deformers) என்று தான் நாம் சொல்லுவோம்; தேசிகரைப்பின்பற்றியவர்களுக்குவடகலையார்என்று பெயர். இவர்கள் ஸ்மிருதிகளில் சொல்லிய ஆசாரங்களை உறுதியுடன் அநுஷ்டிப்பவர்கள் தேசிகரைப் பின்பற்ற இஷ்டமில்லாதவர்கள் தேசிகருடைய காலத்தில் வஸித்தவரும் அவருடைய தாயாதி வழியில ஸஹோதா முறைமையிலுள்ளவருமான ஸ்ரீ லோகாசார்யார் என்பவருடைய தலைமையின் கீழ் வேறு ஒருவகுப்பாகப் பிரிந்தார்கள். இவர்களுக்கு தென்கலையார் என்று பெயர். தென்கலை விதவைகள் தலைமயிரை நீக்குவதில்லை. இந்த வகுப்பு, கி. பி. பதினான்காம்நூற்றாண்டில் வசித்துவந்தஸ்ரீமணவாள மஹாமுனி என்பவருடைய காலத்தில் அதிக பலத்தை அடைந்தது. இவ்விதம் ஸ்ரீ ராமாநுஜாசார் யாருடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்திகளுக்குள் இருவகுப்புகள் ஏற்பட்டன.

அதே பக்கத்தில் ஸ்ரீ மத்வாசார்யார் கி. பி. 1119-ல் அவதரித்தார் என்றும் பக்கம் 367-ல் வைத்யனாத தீக்ஷிதீயம வர்ணாச்ரமதர்மகாண்டம் பக்கம் 468 என்றும் திருத்திக்கொள்ளவும்.

T. S. நடேசசாஸ்திரியார்,
வால்மீகி மாயவரம்,

संक्रमणे सूत्रं वृत्तार्धम् ।

योगोऽन्तरेणोनयुतोऽर्धितस्तौ राशी, स्मृतं संक्रमणाख्यमेतत् ॥

अत्रोद्देशकः—

ययोर्योगः शतं सैकं वियोगः पञ्चविंशतिः ।

तौ राशी वद मे वत्स ! वेत्सि संक्रमणं यदि ॥५३=॥

न्यासः, योगः, 101, अन्तरं, 25, जातौ राशी, 38, 63,

इष्टकर्मानन्तरं केवलसंयोगवियोगादिमत्वसाम्यात् संक्रमणाख्यं कर्माऽऽह— योग इति— राश्योर्योगेऽन्तरे च ज्ञाते तयोः पृथग्ज्ञानार्थं कर्म संक्रमणमित्युच्यते । योगः=राश्योर्योगः, अन्तरेण=तयोर्विश्लेषेण, ऊनयुतः—ऊनश्चासौ युतश्च=ऊनयुतः, एकत्र ऊनः, अन्यत्र युक्त इति यावत् । अर्धितः=द्वाभ्यां भक्तश्च सन्, ऊनेऽर्धिते यो जातः, युतेऽर्धिते च यो जातः, तौ, राशी=उद्देशकोद्दिष्टौ लघुबृहद्राशी, क्रमेण भवतः । एतत्, संक्रमणाख्यं=संक्रमणसंज्ञं, स्मृतं, प्राचीनैरिति शेषः । अत्रायं क्रमः—राश्योर्योगमुभयत्र विन्यस्य तयोरेकस्मादन्तरं विशोध्य, अपरस्मिन्नन्तरं प्रक्षिप्य यौ जायेते, तौ द्वावप्यर्धीकृतौ अभीष्टराशी स्यातामिति । अत्रोदाहरणं—ययोरिति—ययोः=राश्योः, योगः=युतिः, सैकं शतं=एकाधिकशतं, वियोगः=अन्तरं, पञ्चविंशतिः=पञ्चाधिका विंशतिः, तौ राशी=तादृशौ राशी, हे वत्स! मे वद, संक्रमणं, वेत्सि यदि=जानासि चेदित्युक्तार्थम् । न्यासोक्तं वित्रियते—अत्र, य, क, इति राशिद्वयं कल्प्यते । उद्देशकालापवस्करणे, $य+क=101$, $य-क=25$, इति भवति । $(य+क)+(य-क)=101+25=2य=126$, $य=\frac{126}{2}=63$, अयं बृहद्राशिः । एवं, $(य+क)-(य-क)=101-25=2क=76$, $क=\frac{76}{2}=38$, अयं लघुराशिः । अनेनोपपत्तिरपि सूचिता—यथा—अत्र, य, इत्ययं बृहद्राशिः, क इति लघुराशिः, अनयोरन्तरं, य-कं, इति भवति । अस्मिन् लघुराशिः क्षिप्यते चेत्, $य-क+क=य$, इति बृहद्राशिर्भवति । यद्यन्तरं बृहद्राशेश्शोध्यते, $य-(य-क)=य-$

य+क=क, तदा लघुराशिर्भवतीति स्फुटं दृश्यते । यदि तयो राश्योर्युतौ अन्तरं क्षिप्यते, (य+क)+(य—क)=य+क+य—क=2य, तदा बृहद्राशिर्द्विगुणो दृश्यते । सोऽर्धितः $\frac{2य}{2}$=य, इति बृहद्राशिर्भवति ।

एवं राशियोगाद्यद्यन्तरं शोध्यते, (य+क)—(य—क)=य+क-य+क=2 क, तदा लघुराशिर्द्विगुणो दृश्यते । सोऽर्धितः, $\frac{2क}{2}$=क, इति

लघुराशिर्भवतीत्युपपन्नं "योगोऽन्तरेण"त्यादि । अत्र क्षेत्रगतोपपत्तिरपि बुद्धिविलासिन्यामुक्ता । यथा—"अथ बालावबोधार्थं क्षेत्रगतोपपत्तिरुच्यते—राश्योर्योगान्तरतुल्ये इष्टे शलाके कृत्वा ते एकाग्रसंलग्ने ऋजू संस्थाप्ये । अथ ते एव शलाके पार्श्वसंस्पृष्टे स्थाप्ये । अत्र लघुशलाकाया बृहच्छलाका यावत्यधिका—तावद्राश्योरन्तरम् । अतो राशियोगादन्तरे रहिते लघुराशिर्द्विगुणो दृश्यते । राशियोगेऽन्तरेण योजिते बृहद्राशिर्द्विगुणो दृश्यते" इति ॥ ॥५३=॥

वर्गसंक्रमणे करणसूत्रं वृत्तार्धम् ।

वर्गान्तरं राशिवियोगभक्तं योग, स्ततः प्रोक्तवदेव राशी ॥५४॥

अत्रोद्देशकः—

राश्यो र्ययो र्वियोगोऽष्टौ, तत्कृत्योश्च चतुश्शती ।
विवरं, ब्रूहि तौ राशी शीघ्रं गणितकोविद ॥ ५५ ॥

न्यासः, राश्यन्तरं, 8, कृत्यन्तरं, 400, जातौ राशी, 21, 29,

राश्योरन्तरे तयोर्वर्गान्तरे च दृष्टे उद्दिष्टराशिज्ञानोपायं वर्गसंक्रमणमवतारयति—वर्गसंक्रमण इति— वर्गस्यापि प्रवेशादिदं विषमकर्मेत्यपि व्यवह्रियते । वर्गान्तरं=कृत्योरन्तरं, राशिवियोगभक्तं=राश्योर्विवरेण हृतं सत्, योगः=राशियोगो भवति । ततः=तज्ज्ञानात्, प्रोक्तवदेव=संक्रमणसूत्रोक्तरीत्यैव, राशी=उद्दिष्टराशी, साध्यै इति शेषः । अत्र "वर्गान्तरं राशिवियोगभक्तं योगः" इति नियमस्य विलोमविधाने वर्गान्तरं राशियोगभक्तं वियोग इति नियमो भवेदिति स्पष्टम् । योगवि-

योगयोर्ज्ञातयो स्सतो स्संक्रमणसूत्रेण साध्यौ राशी । अत्रोपपत्तिः—"राश्योरन्तरवर्गेण द्विघ्ने घाते युते तयोः । वर्गयोगो भवेदेवं तयोर्योगान्तराऽऽहतिः । वर्गान्तरं भवेदेवं ज्ञेयं सर्वत्र धीमता" इति क्षेत्रव्यवहारे वक्ष्यमाणनियमेन स्फुटा । उदाहरणे—राश्यन्तरं, य—क $=8$, वर्गान्तरं, $य^2-क^2=400$, इत्युक्तम् । वर्गान्तरे, $य^2-क^2$, अस्मिन् राश्यन्तरेण, य—क, अनेन भक्ते, $\frac{य^2-क^2}{य-क}=य+क$, इति राशियोगो भवतीत्यव्यक्तरीत्या, व्यक्तेऽपि, वर्गान्तरे, 400, अस्मिन् राश्यन्तरेण, 8, अनेन भक्ते $\frac{400}{8}=50$, जातम् । अयं राश्योर्योगः । संक्रमणसूत्रेण, $\frac{50+8}{2}=29$, $\frac{50-8}{2}=21$, जातौ राशी, 29, 21, अत्र कर्मप्रदीपिकाव्याख्याने अन्येऽपि प्रभेदा उक्ताः । बालावबोधार्थं तेऽत्र प्रकाश्यन्ते । राशिघातेऽन्तरे च दृष्टे राशिद्वयावगमाय करणसूत्रं वृत्तार्धम्—

(3) वेदघ्नघातान्तरवर्गयोगान्मूलं युतिस्स्यादुभयोश्च राश्योः ।

उदाहरणं— राश्योर्घातस्त्रिषष्टिश्चेत्, पुराणमितमन्तरम् ।
ययोरत्र वद क्षिप्रं तौ राशी गणकोत्तम ॥

न्यासः—राश्योर्घातः, य × क $=63$, राश्योरन्तरं, य—क $=18$, तथा सति चतुर्घ्नघातस्य राश्यन्तरवर्गस्य च युतेर्मूलं राशियोग इति नियमेन, $(य-क)^2+4\,यक=(य+क)^2$ अस्य मूलं, य + क, इति राशियोगो भवति किल । एवं राशिघातस्य, 63, चतुर्गुणितस्य, $63\times4=252$, अस्य, राश्यन्तर, 18, कृतेश्च 324, योगात्, $252,+324=576$, अस्मान्मूलं, 24, अयं राशियोगः । पुनस्संक्रमणसूत्रात् योगान्तराभ्यां जातौ राशी, 21, 3, एवं राशियोगे राशिघाते च दृष्टे राशिद्वयं एतत्प्रातिलोम्येनावगन्तुं शक्यत इति कर्मप्रदीपिकाकारैरयं प्रभेदः परित्यक्तः । बालावबोधार्थमस्माभिरुच्यते—यथा—राश्योर्घाते योगे च दृष्टे तद्द्वयावगमाय सूत्रं वृत्तार्धम्—

(4) चतुर्घ्नघातोनितयोगवर्गात्पदं भवेदन्तरमेव राश्योः ।

434

उदाहरणम्— राश्योर्ययो र्युतिष्षष्टि र्हतिश्चन्द्रशराष्टभिः ।
तुल्या, तौ वद राशी मे विचिन्त्य सुमते द्रुतम् ॥

न्यासः, राशियोगः, 60, घातः 851, चतुर्घ्नघातोनितयोगवर्गः, $(य+क)^2—4$ यक $=(य—क)^2$ इति राश्यन्तरवर्गो भवति तन्मूलं राश्यन्तरं भवतीति नियमेन राशियोग, 60, वर्गः, 3600, चतुर्घ्नघातेन, $851 \times 4 = 3404$, अनेनोनितः, 196, अस्य मूलं 14, इदं राश्यन्तरम् । पुनरपि योगान्तराभ्यां जातौ राशी, 37, 23,

राश्योर्योग, हृतफलाभ्यां राशिद्वयावगमाय सूत्रं वृत्तार्धम् ।

(5) च्छेदफलाभ्यां साध्यौ राशी चान्यत्र कथितसमयेन ।

राश्योर्मध्ये एकेनान्यस्मिन्राशौ भक्ते लब्धं फलं यत्—तत् च्छेदसहितमेकत्र स्थाप्यम् । ताभ्यामन्यत्रोक्तवद्योगवियोगादिकं कृत्वा तेनान्यं विभजेत् । तत्र लब्धेन फलेन पूर्वस्थापितच्छेदफले गुणिते राशी स्यातां । फलस्य मूलकरणे कार्ये सति तदपि कृत्वा तेन च्छेदफले गुणयेदिति । अत्र योगहृतफलयोरुदाहरणम्—

राश्योर्ययोर्द्विषट्कं स्याद्योग, एकेन भाजिते ।
अपरस्मिंस्त्रयं लब्धं तौ राशी वद सत्वरम् ॥

न्यासः—राश्योर्योगः, 12, एकेनान्यस्मिन्भक्ते फलं, 3, अत्र "कल्प्यो हरो रूपमहारराशे"रिति रूपच्छेदेन सहितं फलं, $\frac{3}{1}$, अपरत्र योग इति न्यायेनानयोर्योगः, 4, अनेन योगे भक्ते फलं, 3, अनेन च्छेदे फले च गुणिते जातौ राशी, 3, 9,

च्छेदफलाभ्यामित्यस्य पुनरप्युदाहरणानि सन्ति । वियोगहृतफलयो, र्घातहृतफलयोश्चोदाहरणम्—

(6) भेदस्त्रिषट्को, हरणे फलं स्याद्द्वयं ययो,स्तौ वद तत्र राशी ।
(7) घातस्त्रिषष्टि, र्हरणे च लब्धं सप्त,त्र राशी च वदाऽऽशु मित्र ॥

न्यासः, राश्योरन्तरं, 18, तयोरेकेनान्यस्मिन्भक्ते जातं फलं, 2, इदं पूर्वोक्तवत्, फलं च्छेदेन रूपेण सह स्थाप्यं, $\frac{2}{1}$, फलच्छेदयोरन्तरं, 1, अनेन राश्यन्तरे भक्ते फलं, 18, अनेन फले च च्छेदे च गुणिते